1676

உ

முருகன் துணை.

தொண்டைநாட்டின்கண்

ஸ்ரீசுப்பிரமணியசுவாமி ஸ்தலங்களுள் ஒன்றாகிய

# திருப்போரூர் ஆதீனம்

# சிதம்பரசுவாமிகள் சரித்திரம்.

1676

OFFICE OF THE ... BOOKS ... MADRAS
30 JUN 1927

3698
922.945

அமரம்பேடு

இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்


சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1927.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
183618.



திருப்போரூர் மூலஸ்தானம்.

உ

வேலுமயிலுந்துணை.

# நேரிசைவெண்பா.

காப்பு.

சமரபுரிமாநிம்பத்தண்ணிழற்பாலும்ப
லமரர்தொழவிருந்ததன்றித்—திமிரமலம்
போக்கியெமதுள்ளின்பப்பூரணமாயெவ்விடத்துந்
தேக்கறிவுமாயிருந்ததே. (க)

உலகமெல்லாமீன்றவொருத்திதனப்பாலுண்
டிலகுகவிதைமழையீச—னிலவு
புயமலைப்பாற்பெய்தசுகப்போரியில்வாழ்வானம்
புயமலர்த்தாளென்முடிக்குப்போது. (உ)

Q26!

உ

வேலுமயிலுந்துணை.

# சிதம்பரசுவாமிகள் சரித்திரம்.

சிதம்பரசுவாமிகள் பாண்டிநாட்டிலே திருவாலவாய் முதலாகிய பன்னிரண்டு திருநாமம்பெற்று விளங்குந் திவ்விய க்ஷேத்திரத்திலே சங்கப்புலவர் மரபிலே தோன்றினவரும், அங்கயற்கண்ணம்மை உபாசனாவிரத மேற்கொண்டவரும் ஆகி சிதம்பரகவிராஜர் என்னும் பெயரினராய் ஒருவர் புகழ்பெற்றிருந்தனர்.

கொங்குதேயத்தின்கண்ணுள்ள அவிநாசியிலே, வீரசைவாசாரியராகிய சிவப்பிரகாசசுவாமிகளது பாகிநேயரும் அவர் திருவருள் பெற்றவருமாகிய ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகளிடத்தில் ஞானோபதேசம்பெற்ற குமாரதேவர், தமது ஆசிரியரது கட்டளையின்படி விருத்தாசலத்திலே மணிமுத்தா நதிக்கரையிலே ஓரரசமரநீழலின்கண் அமர்ந்திருந்தனர். அப்போது ஓர் காரணத்தால் அம்மரத்தின்மேல் அநேக வருஷகாலமாய்க் காத்திருந்த பிரமரக்ஷசு அவர்க்கெதிர்சென்று வணங்கலும், குமாரதேவர் "நீ யார்? உன் வரலாறென்னை?" என்று வினவி, அதன் பூர்வ சரித்திரத்தை நன்குணர்ந்து, அது முன்னையதேகம்பெற்றுய்யு

மாறு அநுக்கிரகித்து, தமது நியமத்தின்படி ஆறுமாதத்திற் கோர்முறை அவிநாசிக்குக் குரு தரிசனார்த்தமாய்ச் செல்லுவாராயினர். அம்மார்க்கத்தின்கண் ஓரூரிலே அடியார்பத்தியிற் சிறந்த ஒரு ரெட்டியாருக்குத் தமது அநுக்கிரகத்தினாற் பிறந்த புத்திரர்களுக்கு அவ்வூர்க்குவந்த மேற்சொல்லிய சிதம்பரகவிராஜர் அந்த ரெட்டியாரின் வேண்டுகோளுக்கியைந்து கல்வி பயில்வித்து வந்தனர். அப்படிவருகையில், அங்குவந்த குமாரதேவர் சிதம்பரகவிராஜரது கல்வித்தேர்ச்சியை நோக்கி ஆட்கொள்ளக்கருதிச் சில வேதாந்தச் சொற்களுக்குப் பொருள்வினவ, அதற்கு அவர் உத்தரஞ்சொல்லமாட்டாதவராய் நிற்கக்கண்டு, " வினவிய சொற்கள் அரும்பொருளினவாதலால் இன்னொருகால் யாமிங்கு வரும்போது சொல்க " என்று கட்டளையிட்டு, அவிநாசிக்குச் சென்று ஆசிரியரைத் தரிசித்து மீண்டு மவ்வூர்க்குவந்து கவிராஜரை அச்சொற்களுக்குப் பொருள்வினவ, அப்போதும் உத்தரஞ் சொல்லமாட்டாதவராய் நின்ற கவிராஜரைக் கிருபாநோக்கத்தால் மூன்றுமுறை கேசாதிபாதவரையில் நோக்கி, அவிநாசி வழிக்கொண்டனர். கவிராஜரும் அச்சொற்பொருள்களை யுள்ளுணர்ந்து, அன்பும் பத்தியும் மிகுந்து, அவரைப் பின்றொடர்ந்து சென்று, மறுநாளுதயத்தில் அவிநாசியடைந்து, பரிணமத்திற் புகுந்து புறங்காத்திருக்க, ஒடுக்கத்தினின்றும் வெளியேபோந்த சாந்தலிங்கசுவாமிகள் இருவரையுநோக்கி மீண்டுள்ளே எழுந்தருளி, தாமியற்றிய வைராக்கியசதகம்,

வைராக்கியதீபம்,அவிரோதவுந்தியார்,கொலைமறுத்தல்முதலியநான்குநூல்களையும் கண்ணுடையவள்ளலார் இயற்றிய ஒழிவிலொடுக்கத்தையும் கொண்டுவந்து, தரிசனந்தந்து, குமாரதேவரை நோக்கி, "அப்பா! உன்னைப் புத்திரனாக யாங்கொண்டவாறு நீயும் ஓர் புத்திரனைக் கொணர்ந்தாய். பரிபாகமேலிட்ட இவ்விளவலைக்கொண்டுஇந்நூல்களுக்கு உரை யியற்றுவிக்கக் கடவை" என்று அந்நூல்களைத் தந்தருள, அவற்றைக் குமாரதேவர் இருகையினாலு மேற்றுக் கண்களி லொற்றிக்கொண்டு சிதம்பரசுவாமிகளிடத்திற் கொடுக்க, அவரும் அவைகளைப்பெற்றுச் சிரமேற்கொண்டு வணங்கி அவருடன்சென்று விருத்தகிரியை யடைந்தனர்.

பின்பு சிதம்பரசுவாமிகள் வீராகம உத்தரசைவ சித்தாந்த நிரூபணமாகிய வீரசாமானியாதி தீக்ஷையை விதிப்படி யநுக்கிரகிக்கப்பெற்று அங்கயோகங்களையுமுணர்ந்து ஞானோபதேசஞ் செய்யப்பெற்று ஞானசமாதி கூடியிருக்கையில், ஒருநாள் மயில் ஒன்று தோன்றிச் சொரூபத்தைச் சிறகால் மறைத்து நிருத்தஞ்செய்ய, அதைக்கண்டு ஆசிரியரிடத்திலே சென்று விண்ணப்பஞ் செய்தனர். அதுகேட்டு "நம்மை யிங்குப் பெரியநாயகியார் ஆட்கொண் டுயிர்த்துணையாய் நிற்கின்றபடி உனக்கும் உறுதித் துணையாய் நிற்கின்ற அங்கயற்கண்ணம்மை அதனைப் புலப்படுத்தும்" என்று விடைதந்தனர். குருவாக்கியப்படி மதுரைக்குச் சென்று நாற்பத்தைந்து நாள்வரையில் நாடோறும் பொற்

ருமறையில் மூழ்கி நித்திய கருமானுஷ்டானங்களை முடித்து மத்தியானகாலத்தில் ஒருபிடி பச்சறுகும் மூன்றுரை தீர்த்தமும் உட்கொண்டு நிஷ்டை சாதித்திருக்கையில், தேவியார் சோதனை நிமித்தம் நேரும்படிசெய்த சுரம் கைகாற்பிடிப்பு முதலிய நோய்களுக்கு அஞ்சாமலும் மனநிலை கலங்காமலும் விரதம் தவறாமலும் நின்று, மீனாக்ஷியம்மையை நோக்கிக் கலிவேண்பா என்னுமோர் தமிழ்ப் பிரபந்தம் பாடித்துதித்தனர். தேவியார் திருவுளமகிழ்ந்து எதிர்வந்து அப்பிணிகளுடன் மலப்பிணியும் நீங்குமாறு தமது மலர்க்கரத்தாற் றடவி, "இப்பதிக்கு வடபால் முப்பதுயோஜனை தூரத்திலே யுத்தபுரி என்னும் சுப்பிரமணிய க்ஷேத்திரம் ஒன்று முன்பு ஆறுதரம் பிரசித்தியாயிருந்து இப்போது ஜீர்ணப்பட்டிருக்கின்றது; அதுவேழாந் தரம் உன்னாலே ஜீர்ணோத்தாரணமாகி நிலைபெற்று விளங்கவேண்டுவது; ஆதலால், அக்கடவுள் உனது நிஷ்டானுபவத்தில் மயில் வடிவமாய் வந்து சொரூபத்தை மறைத்து நின்றனர். அக்கடவுளே உமது குருவடிவாய் எழுந்தருளித் தரிசனந்தந்து, மேல் உண்மையை விளக்கும்; நீ இதுபோழ்தே அத்தலத்திற்குச் செல்க" எனத் திருவுளம்பற்ற; அவ்வாறே தேவியாருட்பிரசாதத்தைச் சிரமேற்கொண்டு வணங்கி யுத்தபுரி யென்னுந் திருப்போரூரை நோக்கி வருவாராயினர்.

அந்நாளில் ஜீர்ணமுற்றுப் பனங்காடாகிப் பலவகைக் கொடி செடி மரங்களாலும் அடர்ந்திருந்த திருப்போரூரில்



திருப்போரூரில் முருகர் புற்றிடங்கொண்ட ஐதீகம்.

ஓர் பெண்பனை மூலத்தில் ஸ்ரீ சுப்பிரமணியர் புற்றிடங் கொண்டு வீற்றிருந்தனர். அந்தக்காட்டின்கணுள்ள பனைகளின் பலன்களால் ஜீவனஞ்செய்துவந்த சான்றூர்களுள் ஒருவன் ஒருநாள் அப்பெண்பனை நன்றாய் ஓங்கி வளர்ந்து ஓலைக்கோர் பாளையாக அரும்பி விசேஷித்திருந்ததைக்கண்டு, அதனைச் சூழ்ந்திருந்த ஊனுங்கொடிகளைக் களைந்து, பாளைகளைச் சிணுக்கறுத்துக் குடங்களையவற்றினுட்புகுத்தி மதுவின் பயனைக் கைக்கொண்டு, விசேடப்பிரயோஜனம் பெற்று, அன்று மாலைப்போழ்தில் வந்து பார்க்கையில் முன்போலவே மரம் கொடிகளால் மூடப்பட்டிருக்கக்கண்டு, அவற்றையுமறுத்து மதுவின் பலனைக் கைக்கொண்டனன். இவ்வாறு அதிகரித்துச் சுற்றிக்கொள்ளுகின்ற கொடிகளை நாடோறும் களைவதால் வருத்தமுற்று அவற்றை வேருடன்களைய எண்ணிச் சிலருடன் கருவிகளைக்கொண்டு கொடிகளைக்களைந்து பருத்துக் கீழேயுருவியோடிய அடிவேரைப்பற்றி வெட்டுகையில், புற்றில் திருமேனிமறைந்துள்ள சுயம்புவின்மேல் வாள்தாக்கிச் சிவப்பு உண்டாக, சான்றூன் முதலியோர் மூர்ச்சையாய் வீழ்ந்தனர். அதுகண்ட பிறனொருவன் அயலில் மரமேறிக்கொண் டிருந்தவர்களுக்குத் தெரிவித்துப் பெண்பனையின் அடியை நன்றாகச் சோதித்துப் பார்க்கையில் புற்றினுட் சுயம்புவைக்கண்டு அஞ்சிப் பத்திமேலிட்டு முருகக்கடவுளைத் தோத்திரஞ்செய்ய, மூர்ச்சையாயினோர் தெளிந்தெழுந்தனர். அதுமுதலாக

12818

அவ்வூர்ச் சான்றோர் தமக்குள்ளே எணிக்கோர் பெரிய பணம் வாங்கிப் பூசைமுதலியவை நடத்திவரும்படிக்குச் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி ஆதிசைவர் ஒருவரைக் கொண்டு திருமஞ்சனமுதலிய செய்வித்துக் கற்பூராராத்திகள் செய்விக்கையில் அதைச்சூழ்ந்த ஊரும் அந்நாளில் இயற்றிய கூரைக்கட்டடமாகிய குற்றாலயமும் பற்றிக் கொண்டன. அதுகண்டு யாவரும் ஆச்சரியமும் பயமுமடைந்திருந்தனர்.

இதுநிற்க, சிதம்பரசுவாமிகள் மதுரையினின்று போந்து விருத்தாசல மடைந்து குமாரதேவர் நிஷ்டையிலிருக்கக்கண்டு அவரை வலஞ்செய்து வணங்கி வடதிசை நோக்கிச்செல்லுகையில், பொம்மையபாளயம் என்னும் ஊரிலே சதுரக்கள்ளிப்பாலையே உணவாகக்கொண்டிருக்கும் சிவாநுபூதிச் செல்வராகிய பாலையசுவாமிகள், சிதம்பரசுவாமிகளது அநுபவ சித்தியைக் கேள்வியுற்று அவரைப்பார்க்க விருப்பமுற்றிருக்கையில் தாமும் அவரைக் காணுமாறு அப்பாளயம் நோக்கி வருகையில் இருவரும் ஒருவரையொருவர் எதிர்வரக்கண்டு அளவளாவி, திருமடத்தின் தெருத்திண்ணையிலிருந்து தந்ததாவனஞ் செய்துகொண்டே எட்டுநாள்வரையில் சுவாநுபவத்தைக் குறித்து வசனித்துக்கொண்டிருந்து, ஒன்பதாநாள் உதயத்தில் வாய்பூசி சிவார்ச்சனைமுடித்து அவருடன் புசித்து விடைகொண்டு கிளியனூர் வழிக்கொண்டு சென்

றனர். அப்போது அவ்வூர்ச் சோலையில் பாலோடிக் கொண்டிருந்த செங்குந்தருள் இருவினையொப்பு மலபரிபாகமு நேரிட்டிருந்த ஒரு விதந்துவாகிய நரைமூதாட்டி தம்மைக் கண்டுபணிந் துபசரித்திட்ட புற்கையமுதைப் புசித்து, அம்மூதாட்டியின் வேண்டுகோட் கியைந்து, அங்கு ஓராண்டிருந்து, பின்னர் "யாமிதுபோது ஜீர்ணோத் தாரணஞ்செய்ய வேண்டிச் செல்கின்ற திருபோரூர்க்கு வருக" என்று கட்டளையிட்டு, திருப்போரூராகிய பனங் காட்டையணுகி, அங்கு வள்ளைப்பூடால் நிறைந்த ஓடையில் நீராடி, நியமங்கள்முற்றி, திருப்போரூர்ப் பிரணவமலைச் சாரலில் வேம்படி விநாயகர் கோயிலில் வதிந்திருந்தனர். மூன்றுநாள் மாலைப்போதில் அத்தீர்த்தத்திற்கு வருகையில், சுவாமிகள் அணிந்திருந்த ஆபரணங்களை பறித்துக் கொண்டுபோக யத்தனித்த கள்வர்கள் கண்தெரியாமல் நடுங்கி, சுவாமிகளைநோக்கி, தாங்கள் இன்னாரென்றும் செய்யவந்தகாரியம் இன்னதென்றும் சொல்லி நமஸ்கரித்து க்ஷமித்தருள வேண்டுமென்று ஓலமிட்டனர். அதற்கிரங்கிஅவர்களைநோக்கி, "நீங்கள் இதுவரையில் சம்பாதித்தபொருளில்மிகுந்தபொருளை நம்முருகக்கடவுளுக்குஅர்ப்பணமாக்குவீராயின் கண்கள் தெரியுமாறு சுவாமி கடாக்ஷிப்பார்" என்ன, "அவ்வாறே சத்தஞ்செய்தோம்" என்று சொன்னவுடன் மறைந்த கண்கள் நன்றாய்த்தெரியவே, சுவாமிகளின் அடிபணிந்தெழுந்து தோத்திரஞ்செய்து பொருளைக்கொணர்ந்து தந்துபோயினர். சுவாமிகள் ஓடை

யில் நீராடி நியமமுடித்து அப்பனங்காட்டை நோக்கி வரும்போது அதன்நடுவில் பெண்பனை மூலத்தில் சுயம்பு வாய் முளைத்திருந்தருளிய முருகக்கடவுளைத் தரிசித்து, அன்றுதொடங்கிச் சரண சம்பந்தமில்லாமல் தரிசனமாத் திரஞ் செய்துகொண்டு பிள்ளையார் கோயிலில் வசித்திருந் தனர். ஒருநாள் ஸ்ரீசுப்பிரமணியர் குமாரதேவரைப்போல எழுந்தருளிவரக் கண்டு, அச்சமுற்று விரைந்தோடிச் சர ணஞ்செய்து நின்று, அங்கயற்கண்ணம்மை யருளியதை விண்ணப்பஞ் செய்தனர். அதுகேட்டு, முருகக்கடவுள் "ஆயின் யாமிருவரும் சுவாமியைத் தரிசிப்போம் வருக" என்றருளி, இருவரும் பெண்பனையை யணுகாநிற்கையில், சுவாமிகள் ஆசிரியரைநோக்கி "சுவாமீ! ஆதியில் இவ்வால யம் எவ்வாறிருந்தது" என, ஸ்ரீசுப்பிரமணியர் அவர் நெற் றியில் திருநீறுசாத்தி நேத்திரத்தாற் பரிசித்து "ஆலயமுத லியவற்றைப் பார்ப்பாயாக" என்றனர். ஆலயம், கர்ப்பக் கிருகம் முதலிய மண்டபம், தேவிமார் சந்நிதி, திருமதில், கோபுரவாயில், துசஸ்தம்பம், மாடவீதி, மடாலயம், தீர் த்தமுதலிய யாவும் சிற்பநூலளவுப்படி சிறப்பாக விளங்கி யிருக்கக் கண்டனர். ஆசிரியர் அவ்வாலயத்துட் புகுந்து சுவாமி சந்நிதியில் சிதம்பரசுவாமிகளுக்கு அநுக்கிரகித்து "ஹர ஹர" என்று மூலஸ்தானத்திற் சுயம்புவாய் வீற்றிரு ந்த தம்மைத்தாமே நோக்கி அஞ்சலி முகிழ்த்தாராயினர். அப்போது முருகக்கடவுளாகிய ஆசிரியரது திருவடிகளை எதிராகக்கொண்டு வடதிசையாய்ச் சாஷ்டாங்கமாய்ச்



சிதம்பரசுவாமிகள் கூன், குருடு, குட்டம், முதலானவைகளைத்தீர்த்த ஐதீகம். ௭


சரணம்புரிந்து எழுவதற்குமுன் ஆசிரியராய் எழுந்தருளிய மூர்த்தி திருவுருக்கரந்தனர். சிதம்பரதேவர்பனைமரமூலத்தில் சுவாமி பழையபடியே யிருக்கக்கண்டு ஆனந்தபரவசராயினர். இவ்வாறு ஆசிரியராய்வந்து ஆட்கொண்ட காரணத்தால் அந்நாள் தொடங்கிச் சரணசம்பந்தம் நடந்துவருகின்றது.

பின்பு சிதம்பரசுவாமிகள் நெஞ்சுவிடுதூது என்னும் பிரபந்தமியற்றி விருத்தகிரியில் குமாரதேவர்க் கனுப்பிவிட்டு வழக்கப்படி விநாயகர்கோயிலில் வசித்திருந்தனர். அப்படி யிருக்குநாளில் அவ்வாலயத்தின் வடபாலுள்ள கண்ணுவப்பேடு என்னும் ஊர்க்கருகில் நெடுநாளாய் நேத்திரந்தெரியாதிருந்த ஒரு குலாலன் தனது பிள்ளைகளால் சுவாமிகளின் பிரபாவங்கேட்டு அவரிடம்வந்து நமஸ்கரித்துப் பிரார்த்திக்க, சுவாமிகள் "நீர் விரும்பியபடி ஸ்ரீ சுப்பிரமணியர் கடாக்ஷித்தருளுக" எனச் சிந்தித்தவுடன் அவனுக்குக் கண்கள் தெரிந்தன. அக்குலாலனது வேண்டுகோளால் அவனது சிறுகுடிலின்கண் ஓர் புளியமரநீழலில் நெகிடி வளர்த்துக்கொண்டு வீற்றிருந்து, அதன் வடகிழக்கிலுள்ள காலவாக்கம் என்னு மூரிலிருந்துவந்து சரணமடைந்த ஓர் முடவனைத் திருநீற்றால் பவித்திரனாக்கி, மீண்டும் அநேகர்க்குச் சுரம், சூலை, வயிற்றுவலி, மகோதரம், குடல்வாதம், குட்டம் முதலிய வன்னோய்களையும் நெகிடித் திருநீற்றால் நிவர்த்திசெய்தனர்.

இப்படி துன்பம் நீங்கிச் சுகம்பெற்ற பலருஞ்செலுத்திய காணிக்கைகளேயும் முன்னர்க் கள்வர் தந்துபோன திரவிய முதலியவற்றையுங் கொண்டும் தாமும் அடிமையாய் ஏவற்பணிசெய்தும் ஆலயத்திருப்பணியை நடத்திவர உத்தேசித்திருந்தனர்.

அதுகண்டு அவ்வூர்க்குடிகளும் சான்றோர்களும் வந்து நமஸ்கரித்து "தேவாலய ஜீர்ணோத்தாரணஞ்செய்து நித்தியபூசை முதலியவற்றை நடத்தவேண்டுவது தேவரீர் கடமையாதல் வேண்டும்" என்று வேண்ட, சுவாமிகள் "நீவிர் இக்கிராமத்தை ஆண்டவர்பேரால் தத்தஞ்செய்து, திருப்பணிமுதலான காரியங்களில் வேண்டிய பணிகளே எப்போதுஞ்செய்து வரக்கடவோமென்றும் உறுதிகூறிச் செப்பேட்டில் வரைந்து தருவீராயின் நமதுவேண்டுகோளுக்கியைவோம்" என்ன, சுவாமிகளின் அநுஞையின்படி நடந்துவந்தனர்.

ஆலயகர்ப்பக்கிருகம் கட்டத்தொடங்கியபோது முற்கூறிய கிளியனூர் மூதாட்டி தனது சரீரப்பிரயாசையால் சேகரித்த ஒரு பொன்னைக் கைக்கொண்டு திருப்போருரடைந்து சுவாமிகளைத் தரிசித்து அப்பொன்னைக் காணிக்கையாக வைத்துத் தண்டமிட, சுவாமிகள் அம்மூதாட்டியினது பேரன்பையுள்ளுவந்து அப்பொன்னைத் திருக்கரங்களாலெடுத்து நெற்றியிலும்சிரத்திலும் கண்ணிலும் வைத்துவைத்து ஆனந்தமுற்று, அதனைக் கர்ப்பக் கிருகத்தின் சிகரவேலைக்கு உபயோகித்தனர். அப்போது தரிசனர்த்




திருப்போரூர் சந்நிதானம்.

தம் அங்குவந்த சென்னைப் பாளையத்தாசெட்டியார் என்பவர் அவ்வற்புதத்தைக் கண்டு இரண்டுபை வராகன் கொண்டுவந்து காணிக்கையாகச் செலுத்த, எட்டுநாளைக்குப் பின்னர்த் திருவுளந்திரும்பி அதனைத் திருப்பணிக்கு உபயோகித்துக் கொள்ளும்படி கட்டளையிட்டனர்.


இவ்வாறு கிடைத்த காணிக்கைகளைக் கொண்டு கோயிற் திருப்பணிகளை நிறைவேற்றி யந்திரஸ்தாபனமமைத்துக் கும்பாபிஷேக முதலியன நிறைவேற்றி நித்திய நைமித்திகங்களை நடத்திவந்தனர்.

இதுநிற்க, தாம் வீற்றிருந்த புளியமரத்தின் தென் கிழக்கில் ஓர் பரிணமம் நிருமித்து, அதன் வடபாலிருந்த சிறுகுளத்தைத் தடாகமாக்கி, அதன்மேற்பால் ஓர் சிற்ருலயங் கட்டுவித்து, அதில் விநாயக பிரதிஷ்டையும் வேலாயுத பிரதிஷ்டையும் செய்து, அப்பிள்ளையார்க்குச் சுந்தரவிநாயகர் என்றும் தடாகத்திற்கு வேலாயுத தீர்த்தம் என்றும் பெயர் தந்தனர்.

முன்னர் நெஞ்சுவிடுதூது என்னும் பிரபந்தமியற்றி ஆசிரியரிடமனுப்பி, ஆலயத் திருப்பணிதொடங்கி நடாத்திவருங்காலத்தில் திருப்போரூர்ச்சந்நிதிமுறை, பஞ்சாதிகாரவிளக்கமும், வைராக்கியசதகம் முதலிய ஐந்து நூல்களுக்கும் உரைசெய்து, திருவாசகத்தில் "புணர்ப்பதொக்க வெந்தையென்னை" என்னும் பாசுரத்திற்கு ஆசிரியராய்வந்த முருகக்கடவுள் கட்டளையின்படி பதவுரை வரைந்தருளினர்.

பின்னர் கிளியனூர் அம்மைமேல் அருள்புரிந்து ஞானம்மை எனத் தீட்சாநாமந் தரித்தனர். அந்த ஞானம்மை நெடுநாளிருந்து, ஓர் ஏகாலிப்பெண்ணுக்கு அநுக்கிரகஞ்செய்து, சுவாமிகள் கட்டளையால் கிளியனூரை யடைந்து நிஷ்டாநுபவம் என்னும் சாஸ்திரமியற்றி, அநுபூதியி லொடுக்கமுற்றனள். ஏகாலியம்மையும் சிலநாட் பிறகு ஒடுக்கமாயினள். இவ்விருவர் சமாதிகளும் அவ்வூரில் இந்நாளளவும் ஆராதிக்கப்பட்டு வருகின்றன.

பூவிருந்தவல்லி என்னும் ஊரைச் சார்ந்த கோவூரிலே வேளாண் மரபிற்றோன்றிய திரிபுராந்தகமுதலியார் புத்திரர் சிவசங்கரம் என்னும் பெயருள்ள ஓர் சிறுபிள்ளையை இளமைப்பருவத்திலேயே திருப்போரூர் முருகக்கடவுள் ஆட்கொண்டருள, அச்சிறுவன் சென்னியிற் சடைவளரப்பெற்றுப் பித்தனைப்போல் ஓடியும் பாடியும் கூத்தாடிக்கொண்டு மிருந்தனன். இந்த ரகசியமறியாத தந்தை ஆயுள்வேதியரைக்கொண்டு ஔஷதமுதலியவற்றால் தக்க சிகிச்சைசெய்தும் அம்மயக்க நீங்காமையால் திருப்போரூரடைந்து சிதம்பரதேவரைப் பணிந்து புத்திரனை எதிரிற்கிடத்தி முறையிட்டனர். பிள்ளையின் குறிப்பையுணர்ந்து "ஆறுமுகர் துணைசெய்யும்" என்றருளிய வண்ணம் ஆண்டவர் கிருபையால் பிள்ளைக்கு அம்மயக்கம் நீங்கினதால் தந்தை மகிழ்கூர்ந்து புத்திரனைச் சுவாமிகளிடத்தில் ஒப்புவித்து விடைகொண்டனர்.



சிதம்பரசுவாமிகள் நிட்டைகூடியிருந்த ஐதீகம்.

பின்பு அப்பிள்ளைக்குச் சிவலிங்காதாரண முதலிய வற்றை யநுக்கிரகித்து, திருநீற்றுப்பையும் வேலாயுத மும் ஓர் தட்டுங்கொடுத்து, "குழந்தாய்! இன்றுதொட்டு மடாலயத்தில் பிச்சையேற்றுத் திருப்பணிகளை நடத்தி வருக" எனக் கட்டளையிட்டபடி சிவசங்கரசுவாமிகள் முயன்று பிரமோற்சவ முதலியவற்றைச் சிறப்பாக நட த்தி வந்தனர்.

சிலநாளைக்குப்பின் வைகாசிமாதம் விசாக பௌர்ணிமி யில் தாம் சமாதியில் நிரதிசயானந்த நிலையிற் கலவாமற் கலந்து நிற்குஞ் செவ்வி வருவதுணர்ந்து, அதற்கு முன்னுளாகிய சுவாதிநட்சத்திரத்தில் மஹேசுவரபூசை யும், மறுநாள் விசாகத்தில் ஸ்ரீசுப்பிரமணியமூர்த்திக்கு மஹாபிஷேகமும், மூன்றுநாள் தொடங்கி வேம்படி விநாயகர்க்கும் பிரணவமலைத் தியாகசைலாசநாதர் சந் நிதி முதலியவற்றிற்கு முறைப்படி அபிஷேகாதிகளும் செய்வித்துத் தரிசனஞ் செய்துவரக்கடவை என்று கட் டளையிட்டு, அன்று மஹேசுவரபூசையை நடத்திக்காட்டி, மறுநாள் வைசாக பௌர்ணிமியாதலால் அபிஷேக முதலியவற்றை நடத்துவிக்கும்படிக்கு அவரை ஆலயத் திற்கு அனுப்பி, தாம் வேலாயுததீர்த்தத்தில் மூழ்கிச் சிவபூசை யாராதனை முடித்து ஒடுக்கத்தில் நிஷ்டைகூடி யிருந்தனர்.

அப்பொழுது முப்பதாமாண்டு தொடங்கித் தொண் ணூறுமாண்டளவும் நாடோறுந் தவறுமல் திருவருண

கிரியைப் பிரதக்ஷிணஞ் செய்துவந்த சோணாசலதேவர், தாம் விரும்பியாங்கு அருணகிரீசர் குருமூர்த்தமாய் மானிடச்சட்டைதாங்கி ஓர் ஆதிசைவரைப்போல் தோன்றிக் கட்டளையிட்டவாறு திருப்போரூர்க்கு வர, அதை ஞானநோக்காலறிந்து வரவுபார்த்திருந்த சிதம்பரசுவாமிகளைச் சோணாசலதேவர் அடைந்து சரணஞ்செய்து,

நேரிசைவெண்பா.

எடுத்தசன னங்கடொறு மீன்றெடுத்த தாய்மார்
கொடுத்தமுலைப் பாலனைத்துங் கூட்டில்-அடுத்துவளர்
பன்னு கணைதுயிலும் பாலாழியுஞ் சிறிதா
மன்னு சிதம்பரதே வா.

நெடிலடிவிருத்தம்.

நவகுணமுழுக்குறும்பு நவைகண்மற்றனைத்துந்தீர்த்து
பவகுணஞ்சற்றுந்தாக்காப் பரமயோகிகளாய்நின்ற
சிவகுணச்செல்வர்போற்றுஞ் சிதம்பரதேவாவென்ற
னவகுணம்போக்கியாள்வ தையநின் கடனதாமால்.

யானெனல்காணேன் பூரணவறிவின்
யாதினுமிருந்த பேரிராளிநீ
தானெனநிற்கச் சமத்துறவென்னைத்
தன்னவனுக்கவுந் தகுங்காண்

வானெனவயங்கி நின்றனவைம்பூத
மார்க்கமாநெறி தந்துமாருத்
தேனெனருசித் துளன்பரைக்கலந்த
செல்வமே சிவபெருமானே.

என்றுபாடித் துதித்துவணங்க, சுவாமிகள் கிருபைகூர்ந்து அவர் கோரிக்கையை நிறைவேற்றியருளி, தாம் பூஜா திரவியங்களுடன் நிலவறைவழியாக ஸமாதி ஸ்தானத்தி லிறங்கி ஒடுக்கமுற்று நின்றனர். அச்சமயம் ஆலயத்தில் கர்ப்பூர தீபாராதனை நடந்துவரும் வேளையானதாதலால் சிதம்பரசுவாமிகள் ஆண்டவர் சந்நிதியில் அஞ்சலியஸ்த ராய்த் தோன்றி மூலஸ்தானத்தில் மறைந்திடக்கண்டு சிவசங்கரதேவரும் வேதியர்முதலிய பலரும் அற்புதமும் ஆனந்தமுமுற்று ஹரஹரவென்னு மொலியுடன் பரவச மாயினர்.

சிவசங்கரதேவர் ஆண்டவர் அபிஷேகாதி திருப் பணிகளைக் குறைவற நிறைவேற்றிப் பரிணமத்திற்கு வருகையில் ஆசாரியர் பூரணதசையிலமர்ந்த முறைமை களைக் கேள்வியுற்று அடக்கற்கரிய ஆராமை மேற் கொண்டு ஆசிரியர் ஒடுக்கமுற்ற சந்நிதியினின்று,

கழிநெடில்விருத்தம்.

இக்கலியுகத்திலெழுந்தவென்குருவே
யின்பமேயன்பினுணிறைந்த

முக்கனிரசமேமுதிர்சுவையமுதே
மூதறிவேமறைப்பொருளே
சர்க்கரையொடுகற்கண்டெனருசிக்குந்
தயாளுவேதமியனேன்றனக்குத்
துக்கசாகரத்தைத்தொலைத்தருள்புரிந்தாய்
தூயநீயெங்கொளித்தனையே.

தாழ்விலாப்பொருளே தனிமுதலான
தயாளுவே தற்பரவடிவே
வாழ்வினிற்சிறந்த வதுலமெய்ஞ்ஞான
வானந்தவமுதமே யடுப்போர்க்கேழ்வினை
பிறவியிடர்களைந் தளிக்குமின்பமே
யெளியேனென்றன்னைச்
சூழ்வினையனைத்தும் தொலைத்தருள்புரிந்தாய்
துணைவநீ யெங்கொளித்தனையே.

இத்தலத்தினின்னடி யடைந்தோர்க்கின்பமே
யன்பினிலுறைந்த மெய்த்தவக்
கொழுந்தேவிளங் குமாரமுதே
வேதவேதாந்த தேசிகனே
சித்தமறிந்தென் செனனவெம்பகையை
சிதைத்திட சிறியனேன்றனக்குச்
சுத்தமெய்ஞ்ஞான சுகமளித்தாண்ட
சுகிர்தநீயெங் கொளித்தனையே

அன்பினர்க்குரிய வங்கையிற்கனிபோல
வமர்ந்திடும்முதலே யெவையுந்
துன்பெனக்கரந்த தோன்றலேதுணையே
தொடுத்திடக் கறியவான்பொருளே
மன்பதைக்கெல்லாம் அருளுநற்பரமே
மாதவவடிவமே யடியேற்கென்
பிறப்பிறப்பை தவிர்த்தருள்புரிந்த
வெந்தைநீ யெங்கொளித்தனையே.

பத்திமைபுரியப் பரிந்தெனையழைத்துப்
பணித்து வாவெனக்கினிய
புத்திகளுரைத்து போகெனவிடுத்துப்
புன்மையேன் றன்மையையறிந்த
சித்தநிமல நிட்களநிறைவே
நீணிதியே யருட்குருவே
முத்தியங்கடலே முழுமறைப்பொருளே
முதல்வநீயெங் கொளித்தனையே.

ஐயனேயருளா லகியனையாண்டிங்
கருட்குருவென்ன வீற்றிருந்த
துய்யனே துணையேதோன்றலே
நிறைந்தசுகக் கடலமுதேயெனையிவ்
வையமீதிருத்தி வடியினைமறைத்த
வண்மையை யறிகிலேன்
தமியேனுய்யுமா றருள்வாய்
சிதம்பரதேவேயோவென வுண்ணனைந்தழுவார்.

என்னும் இதுமுதலிய செய்யுளால் மனமுருகித் துதித்துத் துயரப்படக்கண்ட சோணாசலதேவர் ஓடோடியும் வந்து, ஆராமையை ஒருவாறாற்றி, அவரைச் சிதம்பரசுவாமிகளது ஆசனத்திலிருத்தி, ஆண்டுதோறும் வைசாக பௌர்ணிமியிலும் அதற்கு முன்னாளினும் பௌர்ணிமிக்குப் பின்னாள்களிலும் மஹேஸ்வரபூஜை அபிஷேக முதலியவற்றைத் தவறாமல் நடத்தவேண்டுவதென்று சிதம்பரசுவாமிகள் கட்டளையிட்டருளிய முறைமையைத் தெரிவித்து, தாமும் அமுதுகொண்டு விடைபெற்றுத் திருவண்ணாமலைக்குச் சென்றனர்.

இனிச் சிதம்பரசுவாமிகள் ஆதீனத்தில் இரண்டாவது பட்டம்பெற்ற சிவசங்கரதேவர் முதலிய பரம்பரை விருத்தாந்தங்களை அச்சிடப்பட்டு வழங்கும் சரித்திரத்தில் பரக்கக் கண்டுகொள்க.

சிதம்பரசுவாமிகள் சரித்திரம்

முற்றிற்று.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
183818
சென்னை

யம்.

...ங்களில் ஒன்றாகிய இக்கந்தபுராண
...முகாண்டங்களையுடையது. இவற்றுள் முதல்
...று காண்டங்களையும் தொண்டைமண்டலத்திற் சிற
ந்து விளங்காநின்ற காஞ்சிபுரத்துள்ள குமரகோட்டத்து
அருச்சகராகிய காளத்தியப்ப சிவாசாரியார் புத்திரர்
ஸ்ரீலஸ்ரீ - கச்சியப்பசிவாசாரியசுவாமிகள் தமிழில் பன்னி
ராயிரஞ் செய்யுட்காவியமாய் அருளிச்செய்தனர். ஏழாவ
தாகிய உபதேசகாண்டத்தை மேற்படியூர் கோனேரியப்ப
முதலியாரவர்கள் நாலாயிரத்து முந்நூற்று நாற்பத்தாறு
செய்யுளாற் பாடி முடித்தனர். இவ்வாறு இவர்கள் அரு
ளிச்செய்துள்ள கந்தபுராணத்தினை முன்னரே ஒருவாறு
வசனரூபமாக்கி அச்சிட்டிருப்பது யாவருக்குந் தெரிந்த
விஷயமே. இப்புத்தகமும் அதுபோலெண்ணவேண்டாம்
இது கல்வியின்மையையே கலனாகவுடைய வெள்ளறிவி
னர்க்கும் எளிதில் விளங்குமாறு சுத்தமாய் ஐதீகப்படங்க
ளுடன் அச்சிட்டிருக்கின்றனம்.

...ரப்கடிதம் விலைரூபா 5. திக்கடிதம் 2-புஸ்தகம் விலைரூபா 7

இப்படிக்கு

அ. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்

நெ-21, சாண்டவராயப்பிள்ளை தெரு, சென்னை